## கிழக்கு மாகாண பொதுச் சேவையின் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர்,தரம் III (திணைக்களம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை - 2021

கிழக்கு மாகாண பொதுச் சேவையின் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாநாகர சபைகளில் வெற்றிடங்கள் நிலவும் சட்ட உத்தியோகத்தர், தரம் III(திணைக்களம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக்கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2021.08.06 ஆகும்.

**கல்முனை மாநகர சபை - வெற்றிடம் 01**
**மட்டக்களப்பு மாநகர சபை - வெற்றிடம் 01**

**02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள் :**

2.1. இப்பதவி நிரந்தரமானதாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

2.2. இவ்வறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் தேர்ச்சி ஒழுங்கின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

2.3 இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தில் 10 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும்.

2.4 மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு விண்ணப்பிப்பதற்குரிய தகைமைகளையுடைய தற்போது கிழக்கு மாகாண பொதுச் சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பப்பத்திரங்களை தமது திணைக்களத்தலைவருடாக விண்ணப்பித்தல் வேண்டும். அவ்வாறு இப் பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுமிடத்து அவரை குறித்த பதவிக்கு விடுவிக்க முடியும் என அத்திணைக்களத்தலைவர் உறுதிப்படுத்தல் வேண்டும். திணைக்களத்தலைவரினால் விடுவிப்பதற்கு அனுமதிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து, இது அவர்களது முதல் நியமனமாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

**3. தகைமைகள்:**

**3.1. பொதுவான தகைமைகள் :**

3.1.1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

3.1.2. சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த உடல் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

3.1.3. 2021.08.06ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச/மாகாண சேவையில் நிரந்தர பதவியில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை கருத்திற்கொள்ளப்படமாட்டாது.)

3.1.4. நாடளாவிய ரீதியில் இப்பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எவ்வாறாயினும் கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு ஆட்சேர்ப்பின் போது முன்னுரிமை வழங்கப்படும்.

**3.2. கல்வி / தொழில்சார் தகைமைகள் :**

3.2.1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக இருத்தல் வேண்டும்.

**மற்றும்**

3.2.2. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சட்டத்துறையில் பெறப்பட்ட பட்டத்தைக் கொண்ட விண்ணப்பதாரியாக இருத்தல் வேண்டும்.

3.3. அனுபவம் :

உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதைத் தொடர்ந்து ஒரு(01) ஆண்டுக்கு குறையாத முனைப்புடனான தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**கவனத்திற்கு - அனைத்து விண்ணப்பதாரர்களும் பதவிக்கு உரித்தான எல்லாத் தகைமைகளையும் 2021.08.06ஆம் திகதியோ அல்லது அத்திகதிக்கு முன்னரோ பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.**

4. ஆட்சேர்ப்பு முறை :

4.1. கிழக்கு மாகாண சபையின் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம், அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் மேலே 2.2 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். விண்ணப்பதாரிகள் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும் என்பதோடு தேவையான தகைமைகள் இல்லையென நேர்முகப்பரீட்சையில் தெரியவருமிடத்து இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.

4.2. கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் தேர்ச்சி ஒழுங்கின் அடிப்படையில் நிலவும் வெற்றிடங்கள் இரண்டிற்கும்(02) ஆட்சேர்ப்பு செய்யப்படும்

4.3. அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமானதாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கோரப்பட்டுள்ள தகைமைகளுக்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தவறொன்றாக கருதப்படும் என்பதுடன் தகுதியற்றவர்கள் என அடையாளங்காணப்பட்டவர்களது விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

4.4. கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி கிழக்கு மாகாண மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர், தரம் III (திணைக்களம்) பதவிக்கு அமர்த்தப்படுவார். இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 2016.02.25 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 03/2016 இற்கு அமைவாக இருக்கும் என்பதோடு இந்த நியமனத்திற்கான சம்பள முறைமை SL1-2016 சம்பள வகுதியின் கீழ் மாதாந்தம் ரூபா. 47,615 – 10 x 1,335 – 8 x 1,630 – 74,005 ஆகும்.

5. விண்ணப்பிக்கும் முறை :

5.1. இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் **மட்டும்** உபயோகித்து, **இல 1.0 தொடக்கம் 4.2 வரை முதலாம் பக்கத்திலும், இல. 4.3 தொடக்கம் 11.0 வரை இரண்டாம் பக்கத்திலும்** உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

5.2. **உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சைக் குறியீட்டு இலக்கமின்றியும், உரிய விண்ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5.3. இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சத்தியப்பிரமாண ஆணையாளர், பரீட்சார்த்தியின் பிரிவிற்குரிய கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, ரூபா. 292,080/- ஆண்டுச்சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய தொகையை வருடாந்த திரட்டிய சம்பளமாக பெறும் அரச அல்லது மாகாண சேவைச்சேர்ந்த நிரந்த பதவிநிலை உத்தியோகத்தர், முப்படையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பௌத்த விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். **அரச / கிழக்கு மாகாண அரச சேவையிலுள்ள அலுவலரொருவர் விண்ணப்பிப்பதாயின்,** விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு அதனை அப்பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் சான்றுப்படுத்தி திணைக்களத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

5.4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2021.08.06**ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்).**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம்,
198, உட்துறைமுக வீதி, திருகோணமலை

5.5. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் **EX/Rec/21/08** என்பதை குறிப்பிடுவதோடு **"மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்"** என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

5.6. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்துடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ தவறின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி கட்டமைப்பு சார் நேர்முகப் பரீட்சைக்கு சேர்முகப்பரீட்சை அழைப்புக்கடிதம் அனுப்பப்படும். கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதால் அவ் விண்ணப்பதாரி குறித்த பதவிக்கு தகைமையுடையவர் என கருதப்படலாகாது.

## 6. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :

தான் தோற்றும் கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சை தொடர்பில் கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சை சபை திருப்திப்படும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் நேர்முகப்பரீட்சை தினத்தன்று தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்).

இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

7. **கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையானது கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் நடாத்தப்படும்.**

8. **பொய்யான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனை :**

**8.1** விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இந் கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையின் முன்னரோ கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையின் போதோ அல்லது கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியொருவர் சமா்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தா்ப்பத்திலும் அவா் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

**9.** இக் கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு அது தொடர்பில் பிறிதொரு தினத்தில் கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

10. **கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையின் புள்ளி வழங்கப்படும் விபரம் :**

| **புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்** | **உச்சப் புள்ளி** |
|---|---|
| 01. மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| 02. மேலதிக தொழில் தகைமைகள் | 15 |
| 03. மேலதிக அனுபவம்<br>சட்டத்தரணியாக அரச சேவை அல்லது தனியார் துறையில் பெற்றுக்கொண்ட அனுபவத்திற்காக முழுமையான ஒவ்வொரு ஆண்டுக்கும் 05 புள்ளிகள் வீதம் உச்சபட்சமாக 30 புள்ளிகள் வழங்கப்படும்<br>(அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்வதற்காக பெற்றுக் கொண்டுள்ள சட்டத்தரணியாக சேவையாற்றிய ஒரு வருட காலப்பகுதி நீங்கலாக) | 30 |
| 04. கணனி அறிவு | 15 |
| 05. ஆங்கில மொழி தேர்ச்சி | 15 |
| 06. நேர்முகப்பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகள் | 05 |
| **மொத்தப் புள்ளி** | **100** |

**10.** தனது தகைமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகப்பரீட்சைக்குழுவிற்கு கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் தினத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

**11.** இந்த அறிவித்தலில் ஏதாவது திருத்தங்கள் தேவையானவிடத்து அது தொடர்பில் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் இனால் எடுக்கப்படும் தீா்மானமே இறுதியானதாகும். அத்துடன் ஏதாவது விசேட காரணத்தினால் கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையினை நடாத்த முடியாமல் போகுமிடத்து அது தொடர்பான இறுதி முடிவும் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் எடுக்கப்படும் தீா்மானமே இறுதியானதாகும். அதேபோன்று இப்பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தினை முழுமையாகவோ நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பிலும் இறுதி முடிவு கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு/ கௌரவ கிழக்கு மாகாண ஆளுநர் இன் ஆலோசனையின் படி கிழக்கு மாகாண மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

**எம்.வை.சலீம்**,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
**2021.07.13**

**EX/Rec/21/08**

மாதிரி விண்ணப்பபடிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

**கிழக்கு மாகாண பொதுச் சேவையின் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர், தரம் III (திணைக்களம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை - 2021**

நிரந்தர வதிவிட மாவட்டம் : ……………………………………

1.0. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர்: திரு/திருமதி/செல்வி ……...................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு உதா: MR.PERERA,A.B.C)

1.2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்: ……..........................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

1.3. முழுப்பெயர் : ……...........................................................................
(தமிழில்)

1.4. பால் : பெண் - F / ஆண் - M ☐
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)

1.5. தொலைபேசி இல. : ……..........................................................................

2.0. 2.1. நிரந்தர முகவரி : ……...............................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2. நிரந்தர முகவரி : ……..........................................................................
(தமிழில்)

2.3. அனுமதியட்டை அனுப்ப வேண்டிய முகவரி :- ………………..............................................…..
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) ……..............................................................................

3.0. 3.1. தேசிய அடையாள அட்டை இல. ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.2. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3. 2021.08.06 திகதியில் வயது : வருடங்கள் ☐ மாதம் ☐☐ நாட்கள் ☐☐

4.0. கல்வித்தகைமைகள் :

4.1. க.பொ.த (சா/த) பரீட்சை பற்றிய விபரம் :
I. பரீட்சையின் வருடம் :……………………..
II. பரீட்சை சுட்டிலக்கம் :……………………..
III. பெறுபேறு

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2. க.பொ.த (உ/த) பரீட்சை பற்றிய விபரம் :
I. பரீட்சையின் வருடம் :……………………..
II. பரீட்சை சுட்டிலக்கம் :……………………..
III. பெறுபேறு

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

4.3 விண்ணப்பதாரி பெற்றுள்ள சட்டத்துறை பட்டம் தொடர்பான விபரம்,

I. பல்கலைக்கழகம் : ...................................................................................................

II. பட்டம் : ...................................................................................................

III. பட்டம் பெற்ற திகதி : ...................................................................................................

5.0 தொழில் சார் தகைமைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உச்ச நீதி மன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் மேற்கொண்ட திகதி : ...................................................................................................

6.0. விண்ணப்பதாரி பெற்றுள்ள அனுபவம் தொடர்பான விபரம்

6.1. நிறுவனம் : ...................................................................................................

6.2. காலப்பகுதி : ...................................................................................................

7.0. நீங்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா?

அவ்வாறெனின் விபரத்தைக் குறிப்பிடுக: ...................................................................................

8.0. அரச / கிழக்கு மாகாண பொதுச்சேவையை சேர்ந்தவராயின்,

8.1. திணைக்களம் / அலுவலகம் : ...................................................................................

8.2 தற்போதைய பதவி : ...................................................................................

8.3. முதல் நியமனத் திகதி : ...................................................................................

8.4. இச்சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி : ...................................................................................

9.0. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

...................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ......................

10.0. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** (இவ்வறிவித்தலின் 5.3 இன்படி)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி .................................. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ............................... ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

...................................

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்

திகதி :.........................

உத்தியோகத்தரது கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்

உத்தியோகத்தரின் முழுப் பெயர் :.................................

பதவி :...............................................................

முகவரி :...............................................................

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

11.0 **திணைக்களத் தலைவரின் உறுதியுரை:**(அரச/கிழக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கானது)

இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி ................................................ அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமா்ப்பிக்கின்றேன். அவா் விண்ணப்பித்துள்ள பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை அப்பதவிக்கு விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

........................................

திணைக்களத்தலைவரின் கையொப்பம்

திகதி : .......................................................

முழுப் பெயர் : .......................................................

பதவி : .......................................................

முகவரி :.......................................................

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)